DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# MCOP. No.149/2021

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.மல்லிகா | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | மாணிக்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2024.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**எ.ம.த.கு.வி.:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால்? |
| பதில் | : | எனக்கு இரண்டு குழந்தைகள். ஒரு குழந்தை இறந்து விட்டார். |
| கேள்வி | : | மேற்படி இரண்டு குழந்தைகள் ஆண் குழந்தைகள் தான் என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | மசா4 அடையாள அட்டை 29.12.2008 ல் கொடுக்கபட்டதாக உள்ளது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | 14.01.2009 ல் நடிகர் தனுஷ் நடித்த படிக்காதவன் என்ற தமிழ் படத்தில் எடிட்டராக உங்கள் மகன் மனோஜ் பணியாற்றுவதாக கூறுவது பொய் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | ஜெயம் ரவி நடித்த சந்தோஷ் சுப்பிரமணியம் என்ற படத்தில் எடிட்டராக ஜெயம் ரவியின் தந்தை எடிட்டர் மோகன் என்பவர் தான் , உங்கள் மகன் எடிட்டராக நீங்கள் காண்பித்தது தவறு என்றால்? |

| | | |
|---|---|---|
| | |  |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | நீங்கள் உங்கள் மகன் எடிட்டராக பணிபுரிந்ததாக சொல்லும் படங்களில் எடிட்டர் வேறு ஒரு நபராக இருப்பதால் நீங்கள் சொல்வது பொய் சாட்சியம் என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | சினிமா துறையில் பணம் பரிமாற்றம் அனைத்தும் காசோலை மூலமாகத்தான் கொடுக்கப்படும் என்றாலும், அது சம்பந்தமாக உங்கள் மகன் சம்பந்தபட்ட வங்கி ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | சினிமா துறையில் உங்கள் மகன் வருமானம் பற்றிய வருமான வரி ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்கள் மகன் விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தில் ஓட்டுநரின் பின்னால் உட்கார்ந்து வந்தார் என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | இந்த மனு விபத்தானது உங்கள் மகன் சென்ற வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | லாரி ஓட்டுநரின் மீது உள்ள குற்ற வழக்கு இரு தரப்பும் வாதங்கள் செய்து இன்னும் நடந்து கொண்டு வருகிறது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | நீங்கள் யூகத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும், 2009ல் நடந்த விபத்திற்காக 2021ல் மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | இந்த வழக்கை காலவரையறை சட்டத்திற்குள் தாக்கல் செய்யாமல் உள்ளது என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | நீங்கள் உங்கள் மூத்த மகன் ராஜ்குமார் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து அவருடன் நல்ல முறையில் வாழ்ந்து வருகீறிர்கள் என்றால்? |
| பதில் | : | சரிதான். |

| | | |
|---|---|---|
| | | .3. |
| கேள்வி | : | இந்த வழக்கை நான் வேறு ஒரு வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞரிடம் பேசிக் கொண்டு இருக்கும் போது இந்த வழக்கை நான் கூறினேன் என்றாலும், அந்த வழக்கறிஞரின் அறிவுறுத்தலின் படி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | நீங்கள் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடுகளுக்கு உரிய ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | இந்த மனு விபத்தில் சம்பந்தபட்ட இரு வாகன ஓட்டுநரின் ஆர்சி புத்தகம், டிரைவிங் லைசன்ஸ், காப்பீடு பாலிசி ஆகியவைகள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.08.2024 அன்று வியாழன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2024.08.09 09:36:14 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
08.08.2024..